# குறுக்குவிசாரணை

| | | |
|---|---|---|
| **வழக்கு எண்** | :- | **O.S.No.62/2012** |
| **வாக்குமூலம் அளிக்கும் சான்றாளர்** | :- | **வா.சா– 01 ( PW– 01 )** |
| **பெயர்** | :- | **மங்கையர்கரசி க.பெ. நடராஜன்** |
| **தேதி** | :- | **13–03–2026** |

**சான்றாளருக்கு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டது.**

**குறுக்குவிசாரணை**

M/S. Paavai Construction -க்காக அதன் மேலாண் கூட்டாளி என்ற முறையில் இந்த வழக்கை தொடுப்பதாக வழக்குரையில் குறிப்பிடப் -பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நிறுமம் பதிவுசெய்யப்பட்டு இருக்கிறதா என்றால் பதிவுசெய்யப்பட்டு இருக்கிறது. மேற்சொன்ன நிறுமம் பதிவுசெய்யப்பட்ட நிறுமம் என்று வழக்குரையிலோ விற்பனைக்கான ஒப்பந்தத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மேற்சொன்ன நிறுமம் பதிவுசெய்யப்பட்ட நிறுமம் என்று காட்டவும் அதில் நான் மேலாண் கூட்டாளி என்று காட்டவும் இந்த வழக்கில் நான் ஆவணம் எதையேனும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் இல்லை.

விற்பனைக்கான ஒப்பந்தத்தில் என்னுடைய தனிப்பட்ட நிரந்தர கணக்கு எண்ணை (PAN) குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இருந்தாலும் நான் என்னுடைய நிரந்தர கணக்கு அட்டையை பார்த்தால்தான் உறுதியாக சொல்ல முடியும். MCA இணைய தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு என்னிடம் காட்டப்படும் நிரந்தர கணக்கு எண் AGOPM6802G

என்ற அடையாள அட்டையில் என்னுடைய பெயர் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை குறியீடு செய்ய வேண்டப்பட்டது. அந்த ஆவணம் ஏற்கனவே எதிர்வழக்குரையுடன் தாக்கல்செய்யப்படாததாலும் காலதாமதமாக அதை முன்னிட மனு தாக்கல்செய்யப்படாததாலும் அதை குறியீடு செய்ய இந்நீதிமன்றம் மறுக்கிறது.

MCA இணைய தளத்தில் DIN மற்றும் PAN சம்மந்தமான விவரங்களில் என்னுடைய பெயர் எந்தெந்த நிறுவனத்தின் இயக்குனர், மேலாண் இயக்குனர், மேலாண் கூட்டாளி என்ற விவரங்கள் உள்ளது என்றும் அதில் Anantha Karpaga Vinayaga Benefit Fund Ltd, Paavai Foundations Pvt Ltd, Paavai Innovation Forum, Rasipuram Benefit Fund Ltd, Kongu Association LLP ஆகியவை மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளன என்றும் சொன்னால் சரிதான். கூட்டாண்மை நிறுமம் சம்மந்தமாக அதில் பதிவு இருக்காது.

M/s. Paavai Construction என்பது Pvt Ltd நிறுவனமாகவோ அல்லது LLP ஆகவோ MCA இணைய தளத்தில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். M/s. Paavai Construction என்பது GST- ல் பதிவு செய்யப்படவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தற்போது தெரிய -வில்லை. M/s. Paavai Construction என்ற நிறுமத்தின் மேலாண் கூட்டாளியாக இருப்பதால் அதுச் சம்மந்தமான எல்லா விவரங்களும் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். என்னுடைய PAN ID ஆனது GST-ல் பதிவுசெய்யப்படவில்லை என்றால் சரிதான்.

M/s. Paavai Construction -ல் நான் மேலாண் கூட்டாளி என்று சொல்லியுள்ளேன். மற்ற கூட்டாளிகள் யார் என்றால் T.R.மணிசேகரன், T.R.பழனிவேல், M. ராமகிருஷ்ணன், பழனிவேல் ஆகியோர் ஆவர். இந்த வழக்கை தொடுப்பதற்கு மேற்சொன்ன கூட்டாளிகள் அனைவரும் தீர்மானம் நிறைவேற்றினார்களா, எப்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, அது பதிவுசெய்யப்பட்டதா என்பது போன்ற விவரங்களை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அதுச் சம்மந்தமான தீர்மானம் நிறும பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட்டதா என்றால் தீர்மானம் நிறைவேற்றப் -படவும் இல்லை. பதிவுசெய்யப்படவும் இல்லை. கூட்டாண்மை ஒப்பந்தம் ஏற்பட்டபோதே அதில் அந்த அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. எப்போது கூட்டாண்மை ஒப்பந்தம் பதிவுசெய்யப்பட்டது என்று எனக்கு தேதி தற்போது நினைவில்லை. (மேற்சொன்ன கேள்விகள் சம்மந்தமாக எதிர்வழக்குரையில் எதிர்வாதம் எதுவும் வைக்கப்படவில்லை என்றும் அதனால் கேட்க கூடாது என்றும் வாதி தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப் பட்டது. மேற்சொன்ன கேள்விகள் உள்ளார்ந்த கேள்விகளாக இருப்பதால் எதிர்ப்பு நிராகரிக்கப்பட்டது.)

என் கணவர் நடராஜன் Paavai Varam Educational Trust -ன் நிறுவனர் மற்றும் தலைவராக உள்ளார் என்றால் சரிதான். அவர் பட்டய கணக்காயர் என்றால் சரிதான்.

வழக்குரை தயார்செய்வதற்கான விவரங்களை நான் எப்போது யாரிடம் எங்கு வைத்து சொன்னேன், கொடுத்தேன் என்றால் என்னுடைய வழக்குரைஞரிடம் சொன்னேன். 14 ஆண்டுகள் ஆவதால் தேதி, இடம் தற்போது எனக்கு நினைவில்லை. வழக்குரையில் மேற்சொன்ன நிறுமத்தின்

முத்திரையிட்டு கையொப்பம் இட்ட இடத்திற்குமுன் ஒரு குறியீடு செய்யப் பட்டுள்ளது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் இந்த வழக்கில் நான் தாக்கல்செய்த விற்பனைக்கான ஒப்பந்தத்தின் நீதிமன்ற சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நீதிமன்றம் பார்வையிட்டது. அந்த ஆவணம் 2012-ஆம் ஆண்டு ஜீன் மாதம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த ஆவணத்தின் 02-ஆம் பக்கதிற்கு பின்னால் குறிப்பு என்று எழுதப்பட்டு இத்துடன் பதிவுசெய்யப் பட்டுள்ள பிரதியின் எண்ணிக்கை ஒன்று மட்டும் என்று குறிப்பிடப்பட்டு நாள் 03.11.2010- என்று எழுதப்பட்டு சார்பதிவாளரின் கையொப்பம் இடப் -பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

அசல் ஒப்பந்தம் பதிவுசெய்யப்பட்டபோது அதன் படி நகல் ஒன்றும் பதிவுசெய்யப்பட்ட விவரம் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். அந்த படி நகலும் முத்திரை தாளில் எடுக்கப்பட்டது என்றும் அந்த முத்திரை தாள் Paavai Construction, Rasipuram என்ற பெயரில் வாங்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் அந்த ஆவணத்தை பார்த்தால்தான் நான் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அதுவா என்றால் ஆமாம். அந்த ஆவணத்தில் 03-ஆம் பக்கத்தின் பின்புறம் "பிரதி: தமிழ்நாடு 11001-1-11.10 ரூ.100/- Paavai Construction, Rasipuram W 725400 T.V T.உமாமகேஸ்வரி உரிமம் எண் 7/1994 முத்திரைத்தாள் விள்பனையாளர் புதுச் சத்திரம், நாமக்கல் மாவட்டம் முத்திரைத்தாள் உரூபாய் நூறு மட்டும். அசலுக்கும் பிரதிக்கும் வித்யாசம் இல்லை பத்திரத்தில் உள்ள அடித்தல் திருத்தல் வரிபிளவு வகைறராக்கள் யாவும் அசலில் உள்ளது உள்ளபடி" என்று குறிப்பு எழுதப்பட்டு சார்பதிவாளரின்

கையொப்பம் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல்செய்த விற்பனைக்கான ஒப்பந்தத்தின் முதல் பக்க முத்திரைத்தாளின் வரிசை எண் W725399 என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்சொன்ன விற்பனைக்கான ஒப்பந்தத்தின் சார்பதிவக சான்றிட்ட நகல் என்றால் சரிதான். இதற்குமுன் சொல்லப்பட்டுள்ள மேற்குறிப்பு மேற்சொன்ன சான்றிட்ட நகலில் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். **வா.சா.ஆ-01** ஆம் ஆவணத்தில் மேற்சொன்ன குறிப்பு சம்மந்தமான தாள் இல்லை என்றால் சரிதான்.

விற்பனைக்கான அசல் ஒப்பந்தமும் அதன் படி நகலும் ஒரே நாளில் 03.11.2010-ஆம் தேதியன்று அதிகார வரம்புள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான்.

(சான்றாளரின் வேண்டுகோளுக்கு இணங்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/-V. Pugazhenthi,
Additional District&Session Judge,
Salem.